**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003


முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 25.07.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## துல்லிய விவசாயத் தொழில்நுட்பங்கள் – ஏழுநாட்கள் விவசாயிகளுக்கான பயிற்சி

மண் மற்றும் நீர்வள பாதுகாப்புப் பொறியியல்துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்பத்தூரில் துல்லிய வேளாண்மை மேம்பாட்டு மையத்தின் கீழ் 'துல்லிய விவசாயத் தொழில்நுட்பங்கள்' என்ற தலைப்பில் ஏழுநாட்கள் (16.07.2024 முதல் 22.07.2024 வரை) பயிற்சி நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து முப்பத்தைந்து விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். பதிவாளர் முனைவர்.ரா. தமிழ்வேந்தன் அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து, தற்போதைய காலகட்டத்தில் துல்லிய விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பசுமை குடில் அமைப்பு, பசுமை குடிலில் நீர்ப்பாசன நுட்பங்கள், ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் தோட்டக்கலைபயிர் வளர்ப்பு போன்ற துல்லியபண்ணைய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. கோட்பாடு மற்றும் நடைமுறைக் களசெயல் விளக்கம் ஆகிய இரண்டும் கற்றுத்தரப்பட்டன. மேலும் அவர்கள் துல்லியமான விவசாயத்தின் கீழ் இயங்கும் பல்வேறு விவசாய அலகுகளையும் பார்வையிட்டனர். வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர்.அ. ரவிராஜ் முன்னிலையில் நிறைவு விழா நடைபெற்றது. மேலும், பங்கேற்பாளர்களிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன.

**மக்கள் தொடர்பு அலுவலர்**